2014 ஜூலை 25]

திரு. அ. பாப்பா சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள ஏழையெளிய மற்றும் நடுத்தர மக்களின் வாழ்வில் ஒளியேற்றியும், (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைதி. அமைதியாக இருங்கள்.*

திரு. அ. பாப்பா சுந்தரம்: *தமிழகத்தின் தார்மீக உரிமைகளைப் பாதுகாத்து, காவேரி மற்றும் முல்லைப் பெரியாறு அணைகளில் தமிழர்களின் உரிமைகளைப் பெறுவதற்கு சட்டபூர்வமான நடவடிக்கை எடுத்து, அதில் வெற்றியும் கண்டு, விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றிய, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலுள்ள கிட்டத்தட்ட ஏழரை கோடி மக்களின் (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைதி, அமைதியாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.*

திரு. அ. பாப்பா சுந்தரம்: *..நெஞ்சங்களில் நிறைவாக நிறைந்திருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். என்னை சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக நியமதித்து, இந்த மாபெரும் சட்டமன்றத்தில் அறிக்கையைச் சமர்ப்பிக்க உத்தரவிட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2013-2014 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் பதினொன்றாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன், நன்றி.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், அரசு உறுதிமொழிக் குழுத் தலைவர்.*

திரு. ஏ.கே. போஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணையின் இருப்பிடமே! வெற்றிகளின் பிறப்பிடமே! இறைவன் தந்த எங்கள் இதய தெய்வமே! இந்திய அரசியலின் வழிகாட்டியே! தமிழக மக்களின் ஏற்றமிகு வாழ்க்கைக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க*

திட்டங்களை நிறைவேற்றிடும் மக்கள் போற்றும் மகா சக்தியே! (மேசையைத் தட்டும் ஒலி) தீய சக்திகளையும், நன்றி கெட்டவர்களையும், நயவஞ்சகர்களையும் அடியோடு வீழ்த்திய வீரத் திருமகளே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் வாழும் மனித தெய்வமே! மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதிமொழிக் குழுவின் 103 முதல் 114 வரையிலான 12 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன், நன்றி.

நண்பகல் 12-00

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு. ஆர். மனோகரன், மனுக்கள் குழுத் தலைவர்.

***திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாடுகளும், உலக வங்கியும் உவந்து பாராட்டிய, உலகம் போற்றும் உன்னதத் தலைவியே! சாதனைகளின் குவியலே! (மேசையைத் தட்டும் ஒலி) கருணையின் பிறப்பிடமே! முல்லைப் பெரியாறு பிரச்சினைக்கு முடிவு கட்டிய எங்கள் முதன்மை முதல்வரே! (மேசையைத் தட்டும் ஒலி) 'அமைதி, வளம், வளர்ச்சி' என்னும் 3 இலக்கினை முன்னிறுத்தி, முன்னேற்றப் பாதையில் தமிழகத்தை வழிநடத்திச் செல்லும் எங்கள் தன்னிகரில்லாத் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) அன்பை அறமாக்கி, ஆற்றலை செயலாக்கி, அரசாட்சிக்கே இலக்கணம் படைக்கும் எங்கள் புரட்சித் தலைவி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களைப் பணிந்து, இருகரம் கூப்பி வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டிற்கான பேரவை மனுக்கள் குழுவின் நாற்பது மற்றும் நாற்பத்தொன்றாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி, வணக்கம்.